# பழைய ஏற்பாடு ஆய்வு (பாடம்-3)

**ஆதியாகமம்**

தேவன் தான் கொடுத்த வாக்குதத்தங்களை எல்லா விதமான சூழ்நிலைகளிலும் ஆபிரகாமுக்கு நினைப்பூட்டிக் கொண்டே வருவதினால் நம்முடைய தேவன் வாக்குத்தத்தத்தில் உண்மையுள்ளவர் என்பதை நன்கு அறியமுடிகிறது. இவைகளை ஆதியாகமம் 15ம் அதிகாரம், 17ம் அதிகாரம், 22ம் அதிகாரம் நமக்கு உறுதிப்படுத்துகிறது.

ஆபிரகாமுக்கு தேவன் கொடுத்த வாக்குதத்தம்

1. ஈசாக்குக்கும் உரியது – ஆதியாகமம் 28ம் அதிகாரம்
2. யாக்கோபுக்கும் உரியது – ஆதியாகமம் 39ம் அதிகாரம்
3. யோசேப்புக்கும் உரியது – ஆதியாகமம் 48:1-6

யாக்கோபின் தீர்க்கதரிசன வார்த்தைகளோடு ஆதியாகமம் நிறைவு பெற்றாலும் (49ம் அதிகாரம்) இதனுடைய நிறைவேறுதல் யாத்திராகமத்திலும் அதனை தொடர்ந்து வருகிற புத்தகங்களிலும் நிறைவேறுகிறது.

**யாத்திராகமம்**

யாத்திராகமம் “விடுதலையின் புத்தகம்” என்று அழைக்கப்படுகிறது.

ஆதியாகமத்தின் கருப்பொருள் யாத்திராகமத்திலும் தொடர்கிறது. ஆதியாகமத்தில் நோக்கம் வெளிப்படுத்தப்படுகிறது. யாத்திராகமத்தில்தான் அந்த மீட்பின் திட்டம் நிறைவேறுகிறது.

யோசேப்பு தன் சகோதரர்களிடம் செய்த வாக்கும் உறுதிமொழியான உடன்படிக்கையோடு ஆதியாகமம் நிறைவுபெறுகிறது. அதனுடைய நிறைவேறுதல் நடைபெறுவதற்கான தொடக்கம் யாத்திராகமத்தில் ஆரம்பமாகிறது.

வாக்குத்தத்தத்தின்மேல் வைத்த விசுவாசத்தின் நிறைவேறுதல்தான் யாத்திராகமம்.

யாத்திராகம புத்தகத்திற்கு கிரேக்கமொழியிலிருந்து கிடைக்கும் பொருள் ‘புறப்படுதல்’ என்பதாகும்.

யாத்திராகமம் புத்தகத்தின் சம்பவங்கள் நடந்த காலம் கி.மு 15ம் நூற்றாண்டு (கி.மு.1441) என்று கணிக்கப்படுகிறது.

மோசே எகிப்துக்கு திரும்ப போகும்படி தேவன் கூறியபிற்பாடும் மோசே காலதாமதம் செய்வதற்கு இரண்டு காரணங்கள்:

1. எகிப்திலே வல்லமை நிறைந்த நிலையான அரசாட்சி (60 ஆண்டுகள்) செய்து கொண்டு இஸ்ரவேல் ஜனங்களை ஒடுக்கின பார்வோன் ஷமூன்றாம் துத்மோஸின்' மரணத்திற்காக காத்திருந்தார்.

2. சீரியா, பாலஸ்தீனா ஆகிய பகுதிகளின் ஆளுகைக்குள் இருந்த எல்லா பகுதிகளும் எகிப்துக்கு விரோதமாக போர்தொடுக்க ஆயத்தமாக இருந்தனர். இந்த காரியமும் கைகூடி வரட்டும் என்றும் காத்திருந்திருக்கலாம்.

யாத்திராகம புத்தகத்தின் பிரதான இரண்டு பிரிவுகள்

1. தேவனுடைய பராக்கிரம செயல்களால் இஸ்ரவேல் புத்திரர்கள் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெறுதல் (1:1 - 18:26)

2. சீனாய் மலையில் தனது ஜனங்களோடு ஏற்படுத்திய நித்திய உடன்படிக்கை (19:1 - 40:38)

1. தேவனுடைய பராக்கிரம செயல்களால் இஸ்ரவேல் புத்திரர்கள் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெறுதல்:-

இந்த தலைப்பின் கீழ் ஐந்து பிரிவுகள்

1. ஒடுக்கப்படுதல், 2.மோசேயின் பிறப்பு, வளர்ப்பு, வனாந்திர அனுபவம் 3. பத்து வாதைகள், 4.பஸ்கா பலி, 5.யாத்திராகம யாத்திரை

i) செங்கடல்நிகழ்வு

ii) வனாந்தரத்தில் தேவனின் போரிப்பு வழிநடத்துதல்

1. ஒடுக்கப்படுதல்

பார்வோன் ஜனங்களை ஒடுக்கினதற்கு இரண்டு காரணங்கள்

1. இஸ்ரவேல் ஜனங்களின் பெருக்கத்தை தடுக்க வேண்டும்.

2. அண்டை நாட்டினரோடு சேர்ந்து யுத்தம்செய்து தேசத்தைவிட்டு போய்விடக்கூடாது.

2. மோசேயின் பிறப்பு, வளர்ப்பு, வனாந்திர அனுபவம்

முதல் 40 ஆண்டுகள்

'ஆண்பிள்ளைகளை கொன்றுபோடுங்கள்' என்கிற ராஜாவின் கட்டளை நடைபெற்றுக்கொண்டிருக்கிற சூழ்நிலை.

பார்வோனின் குமாரத்தியே மோசேயின் தாய்க்கு சம்பளம் கொடுத்து மோசேயை வளர்த்தல்.

மோசே எகிப்தின் சகல சாஸ்திரங்களையும்,கலைகளையும் கற்றுக்கொண்டார்.

யூதனுக்கு உதவ முற்பட்டு எகிப்தியனை கொன்றதினால் எகிப்தைவிட்டு ஓடிப்போனார்.

இரண்டாவது 40 ஆண்டுகள்

- திருமணம்
- வனாந்தரத்தில் ஆடுகளை மேய்த்தல்

மூன்றாவது 40 ஆண்டுகள்

இஸ்ரவேல் ஜனங்களை வனாந்திரத்தில் வழிநடத்த வேண்டியதிருப்பதால் முன்கூட்டியே வனாந்திர அனுபவத்தை தேவன் மோசேக்கு கொடுத்தார். இந்த வனாந்தர அனுபவம் மோசேக்கு பரந்துவிரிந்த தெளிவான ஆலோசனைகளையும் வழிநடத்துதல்களையும் பிற்காலத்தில் கொடுத்தது என்று சொன்னால் அது மிகையாகாது.

3. எகிப்தின் மீது 10 வாதைகள்

வாதைகள் அனைத்தும் தேவனுடைய ஷவல்லமையின் வெளிப்பாடு' என்று கூறலாம். யாத்திராகமம் 7:14-12:36

யெகோவாவே தேவன் என்று பார்வோனும் எகிப்தியரும் அறிய வேண்டும் என்பதற்காக இந்த வாதைகள் கொடுக்கப்பட்டன.

10 வாதைகள்

1. நைல் நதி இரத்தமாக மாறுதல் - 7:14-25

2. தவளைகள் தேசத்தை நிரப்புதல் - 8:1-12

3. பேன்கள் - 8:16-19

4. பலவித வண்டுகள் - 8:20-32

5. மிருக ஜீவன்களின்மேல் வந்த கொள்ளைநோய் - 9:1-7

6. கொப்பளங்கள் - 9:12

7. கொடிய கல்மழை - 9:13-25

8. வெட்டுக்கிளிகள் தேசத்தை மூடுதல் - 10:1-20

9. எகிப்தை மூடிய காரிருள் - 10:21-29

10. தலைப்பிள்ளை சங்காரம் - 11:1-10 ரூ 12:29-36

4. பஸ்கா

-எல்லா தலைமுறைகளிலும் பண்டிகையாக கொண்டாட வேண்டிய நித்திய உடன்படிக்கை

-எபிரெயமொழியில் 'பெஷா' என்றும் கிரேக்கமொழியில் 'பஸ்கா' என்றும் இந்த பஸ்கா அழைக்கப்படுகிறது.

- முக்கியத்துவம் வாய்ந்த பண்டிகை. ஆகவே இந்த பண்டிகை கொண்டாடப்படுகிற ஆபிப்மாதமே இஸ்ரவேலரின் நாட்குறிப்பில் முதல் மாதமாக மாறிவிட்டது.

- ஜீவன் தப்ப வீட்டில் நிலைகால்களில் இரத்தம் பூசப்பட வேண்டும்.

- இயேசுகிறிஸ்து சீ'ர்களோடு இராப்போஜனம் பண்ணினது இதையே குறிக்கிறது.

- நாம் திருவிருந்து பந்தியை அனுசரிக்கிறோமே இதுவும் அதற்கு ஒப்பணையானதே!

5. யாத்திரை

-புருஷர்கள் மாத்திரம் 6,00,000 பேர்

- புறஇனமக்களும் இஸ்ரவேலரோடு கடந்து சென்றனர். இவர்களே மோசேக்கும் ஆரோனுக்கும் இடையூறு செய்ய கூடியவர்களாக பல சமயங்களில் இருந்திருக்கலாம்.

- தேவஜனம் ஒழுங்குப்படுத்தப்பட்ட ஜனக்கூட்டமாய் ஆசீர்வதிக்கப்படவே, உருவாக்கப்படவே, இப்படிப்பட்ட புறஇனமக்களும் அனுமதிக்கப்பட்டனர் பிரயாணத்தில்.

- வாக்குத்தத்தம் பெற்ற தம்முடைய ஜனங்களை மீட்கிற தேவனின் செயலை செங்கடலில் தரைவழியாக நடக்க செய்த அந்த அற்புதத்திலிருந்தே நாம் காண முடிகிறது.

கேள்விகள்

1. ஆதியாகம புத்தகத்தின் சம்பவங்கள் எவ்வாறு யாத்திராகம புத்தகத்தோடு தொடர்புடையதாக இருக்கின்றது என்பதனை கூறுக?

2. யாத்திராகம புத்தகத்தின் பிரதானமான இரண்டு பிரிவுகள் யாவை? அதில் முதல் பிரிவின்கீழ் வருகின்ற ஏனைய பிரிவுகள் யாவை?

3. மோசேயின் பிறப்பு, வளர்ப்பு மற்றும் அவனது வனாந்திர அனுபவம் பற்றி இப்பாடத்தின் மூலமாக கற்றுக்கொண்டவைகளை கூறுக?

4. எகிப்துக்கு திரும்ப போகும்படி மோசேயிடம் தேவன் கூறிய பிறகும், மோசே எகிப்துக்கு போகாமல் காலதாமதம் செய்ததற்கான காரணங்களை குறிப்பிடுக?

5. எகிப்தின்மீது தேவன் வெளிப்படுத்திய பத்து வாதைகளை வரிசைப்படுத்திக் கூறுக? ஏன் இந்த வாதைகளை எகிப்தின் மீது தேவன் வர பண்ணினார்?